1974 மார்ச 14]

THIRU N. DENNIS: May I know whether the State Government have itemised the commodities for import and export from this State and may I also know the total value of those commodities?

THE HON. THIRU S. MADHAVAN: This question relates to sponsoring authorities for export permits.

Moral discourses in Jails.

* 424 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether moral discourses were given at Central Jails in this State during the calendar year 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை@ ஒன்று அவை முன்பு வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: யாரால் இந்தச் சொற்பொழிவாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்? சப்ஜெக்ட் யாரால் கொடுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சிறை இலாக்காவால்.

திரு. ஆ. பரந்தாமன்: இந்த விவர அறிக்கையில் இப்படிப்பட்ட பாடங்கள் சென்டிரல் ஜெயிலில் நடந்ததாகத் தெரியவில்லை. இதற்கான காரணங்களைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: காரணம் எதுவும் இருக்காது. ஒவ்வொரு சிறைச்சாலையிலும் ஆங்காங்கு ஏற்பாடு செய்யச் சொல்லியிருக்கிறோம். அந்தச் சிறைச்சாலையில் செய்யாவிட்டால் ஏற்பாடு செய்யப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த விவர அறிக்கையில் திருச்சி சிறையிலும் சரி, மற்ற எல்லா சிறைச்சாலைகளிலும் சரி மதபோதனையாகவே செய்யப்படுவதாகத் தெரிகிறதே, மத போதனைகளுக்குப் பதிலாக இன்று நாட்டில் இருக்கக் கூடிய முற்போக்கான கருத்துக்களைச் சொல்லுவதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

@ 468-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முன்னாலே அப்படி இருந்தது. கதாகாலக்ஷேபம் நடந்துகொண்டிருப்பதைப் பார்த்துவிட்டுத்தான், திருக்குறள், திருவாசகம், திருப்புகழ் போன்ற தமிழ் இலக்கியங்களிலுள்ள அறக் கருத்துக்களை தமிழ்ப் புலவர்களை வைத்துச் சொல்ல வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இப்போது பல இடங்களில் திருக்குறள் சொல்லப்பட்டு வருவதை, விவர அறிக்கையில் பார்த்தால் தெரியும்.

Crop Insurance Scheme.

* 425 Q.—THIRU N. K. PALANISWAMY, THIRU D. S. A. SIVAPRAKASAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have introduced Crop Insurance as a Pilot Scheme in this State during 1973 ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பயிர் இன்ஷூரன்ஸ் செய்வதற்கு சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக 1971 இல் ரூ. 38,500 செலவிடப்பட்டது. பயிர் இன்ஷூரன்ஸைத் தொடங்குவதாக இருந்தால், அதனால் நட்டம் ஏற்படக்கூடுமாதலால், அந்த நட்டத்தை மத்திய அரசே ஏற்றுக்கொள்ளுமா என்பது கடிதப் போக்குவரத்தில் இருக்கிறது. இன்ஷூரன்ஸ் மத்திய அரசின் பொறுப்பு என்பது அரசியல் சட்டம்.

திரு. என். கே. பழனிச்சாமி: இதைப்பற்றி கடிதப் போக்குவரத்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நட்டம் எவ்வாறு ஏற்படும் என்று அமைச்சர் சொல்வார்களா?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : மத்திய அரசு இன்ஷூரன்ஸ் ப்ரீமியத்தை 5 சதவீதமாக வைக்கச் சொல்லியிருக்கிறது. நாம் இதை பரிசீலனை செய்து பார்த்ததில் குறைந்த பட்சம் 20 சதவீதமாக வைத்தால்தான் நட்டம் ஏற்படாதிருக்கும். அதாவது ஐந்தில் ஒரு பங்கு, ஆயிரம் ரூபாய் பயிருக்கு 200 ரூபாய் ப்ரீமியம் இருந்தால்தான் கட்டுப்படியாகும். நன்றாக விளையக்கூடிய இடத்தில், 20 ஆண்டுக்கு ஒரு முறைதான் தீய்வு ஏற்படும் என்கிற இடத்திலாவது இந்தத் திட்டத்தைக் கொண்டு வரும்படி மத்திய அரசு சொல்லுகிறது. நிச்சயமாக விளையும் என்கிற இடத்தில் இருக்கிற விவசாயிகளிடம் இருந்து இன்ஷூரன்ஸ் கட்டணத்தை வாங்க முடியாது. ஆக 5 சதவீதம் ப்ரீமியம் என்பது கட்டுப்படியாகாது என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.